**செய்தி வெளியீடு எண்: 661** **நாள்:30.09.2019**

## வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு தோட்டக்கலைப் பயிர்களுக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள தோட்டக்கலைத்துறை ஆலோசனை

பருவமழைக் காலங்களில் ஏற்படக்கூடிய வெள்ளம் மற்றும் புயல் பாதிப்பினால் பயிர்சேதம் ஏற்படலாம். பொதுவாக மழைக்காலங்களில் வெப்பநிலை குறைந்து காற்றில் ஈரப்பதம் அதிகமாவதால் பூச்சி மற்றும் நோய்களின் தாக்கம் பயிர்களில் அதிகம் தென்படும். தோட்டங்களை களைகள் இன்றியும் காய்ந்த இலை தளைகள் இன்றியும் பராமரிப்பதன் மூலம் பூச்சி மற்றும் நோய்களின் பெருக்கத்தை குறைக்கலாம். மேலும் இனக்கவர்ச்சி பொறி ஏக்கருக்கு 15 வைத்து ஆண் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். இரவு நேரங்களில் எக்டருக்கு ஒரு விளக்கு பொறிகளை வைத்து பெண் பூச்சிகளை கவர்ந்து அழிப்பதன் மூலம் முட்டையிட்டு பெருகுவதை தவிர்க்கலாம்.

### 1. காய்கறிகள்

- உரிய வடிகால் வசதி செய்திட வேண்டும்.
- காய்கறிப் பயிர்களான தக்காளி, கத்தரி, மிளகாய் மற்றும் கொடிவகை காய்கள் ஆகியவற்றிற்கு முறையாக மண் அணைப்பதன் மூலம் நீர் தேக்கத்தினால் வேர்கள் அழுகுவதை தவிர்க்கலாம்.
- காய்கறிப் பயிர்கள் நடவிற்கு திறந்தவெளியில் நாற்றாங்கால் அமைப்பதை தவிர்த்து குழித்தட்டு முறையில் பாதுகாக்கப்பட்ட நிழல்வலைக் குடில்களில் நாற்றுகளை உற்பத்தி செய்யலாம்.
- டிரைக்கோடெர்மா விரிடி என்ற நன்மை தரும் நுண்ணுயிரியை மக்கிய தொழுஉரத்துடன் கலந்து பயிர்களுக்கு இடுவதன் மூலம் வாடல் நோய்களின் தாக்கத்தை கட்டுப்படுத்தலாம்.
- சூடோமோனாஸ் பூஞ்சாண உயிரியல் கொல்லியினை இலையில் தெளிக்க வேண்டும்.

### 2. வாழை

- காற்றின் வேகம் அதிகமாக இருக்கும் இடங்களில் வாழை மரங்களை சுற்றி மண் அணைத்தும், சவுக்கு அல்லது யூகலிப்டஸ் குச்சிகள் மற்றும் கயிறுகள் மூலம் முட்டு கொடுத்தும் சாய்வதை தவிர்க்கலாம்.
- வாழைத்தார் உறைகளைக் கொண்டு வாழைத்தார்களை மூடுவதன் மூலம் மழைநீர் நேரடியாக காய்களில் பட்டு ஏற்படுத்தும் பாதிப்பு மற்றும் நோய்களிலிருந்து பாதுகாக்கலாம்.
- வாழைத் தோப்பினைச் சுற்றி வாய்க்கால் எடுத்து மழைநீர் தேங்காமல் வெளியேற வடிகால் செய்ய வேண்டும்.
- காற்றினால் பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் கீழ்மட்ட இலைகளை அகற்றிவிட்டு மரத்தின் அடியில் மண் அணைத்தல் வேண்டும்.
- 90% –க்கு மேல் முதிர்ந்த தார்களை அறுவடை செய்தல் வேண்டும்.

3. **மா, பலா மற்றும் முந்திரி போன்ற பல்லாண்டு பயிர்கள்**

- காற்று மரங்களின் ஊடே புகுந்து இலகுவாக செல்லும் வகையில் பக்கக் கிளைகளையும் அதிகப்படியான இலைகளை கவாத்து செய்து மரம் வேரோடு சாய்வதை தடுக்கலாம்.
- நிழல் தரும் மரங்களில் தேவையற்ற கிளைகளை பருவ மழைக்கு முன்னரே கவாத்து செய்வதன் மூலம் நல்ல காற்றோட்ட வசதியை ஏற்படுத்தி மலைத்தோட்டப் பயிர்களான காபி, மிளகு, டீ, ஆரஞ்சு போன்றவற்றில் ஏற்படக்கூடிய நோய்களைத் தவிர்க்கலாம்.
- கவாத்தின்போது வெட்டப்பட்ட பகுதியில் காப்பர் ஆக்சி குளோரைடு 300 கிராம் 1 லிட்டர் நீரில் கலந்து தடவி பூச்சி மற்றும் நோய் ஊடுருவுவதை தவிர்க்க வேண்டும்.
- தோப்புகளுக்கு நீர் பாய்ச்சுவதை இரண்டு நாட்களுக்கு முன்பே நிறுடத்திவிடுவதன் மூலம் வேர்ப்பகுதி இறுகி மரம் காற்றில் சாயாமல் தடுக்கலாம்.
- தோட்டங்களில் காய்ந்த நோய்வாய்ப்பட்ட செடிகளையும் களைகளையும் அகற்ற வேண்டும்.
- அடிமரத்தை சுற்றி மண் அணைக்க வேண்டும். 1 முதல் 3 வயதுள்ள கன்றுகள் மற்றும் ஒட்டுச் செடிகளை முட்டுக் கொடுத்து நிலை நிறுத்திக் கொள்ளலாம். முட்டுக்கொடுப்பதற்கு பச்சை குச்சிகளை பயன்படுத்துவது சிறந்தது.
- குடியிருப்பு பகுதிகள் மற்றும் கால்நடைத் தொழுவங்களை சுற்றி உள்ள மரங்களின் கிளைகளை அகற்றி விட வேண்டும்.

4. **பசுமைக்குடில்**

- பசுமைக்குடில் / நிழல்வலைக் குடிலின் அடிப்பாகம் பலமாக நிலத்துடன் இணைப்புக் கம்பிகளால் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- பசுமைக்குடிலின் உட்பகுதியில் காற்று உட்புகா வண்ணம் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் மூடியிருக்க வேண்டும்.
- அருகிலுள்ள பெரிய மரங்களில் கிளைகளை அகற்றி விடவேண்டும்.
- பசுமை மற்றும் நிழல்வலைக் கூடங்களைச் சுற்றி சவுக்கு போன்ற காற்றின் வேகத்தை குறைக்கக்கூடிய மரங்களை உயிர்வேலியாக அமைப்பதன் மூலம் காற்றின் பாதிப்பிலிருந்து பாதுகாக்கலாம்.
- பசுமைக்குடிலின் பகுதி மற்றும் அதனை சுற்றியுள்ள இடங்களை சுத்தமாக வைத்துக்கொள்வதன் மூலம் பூச்சி நோய் பரவுவதை தவிர்க்கலாம்.
- பசுமைக் குடிலின் கட்டுமானத்திலுள்ள கிளிப்புகளை மாற்ற வேண்டும்.
- கிழிந்து போன நிழல் வலைகளை தைத்து சரிசெய்ய வேண்டும்.
- நிழல்வலைக் குடிலில் குழித்தட்டில் தயார் செய்யப்பட்டுள்ள நாற்றுகள் அதிகபடியான மழைநீரினால் பாதிப்படையாமல் இருக்க மழை அதிகம் இருக்கும் தருணங்களில் நெகிழித்தாள்கள் (Plastic Sheet) கொண்டு நாற்றுகளை மூடி பாதுகாக்கலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**